பக்கங்கள்: 11

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 09 வள்ளுவர் ஆண்டு 2055 தை 28 செவ்வாய்க்கிழமை 11.02.2025 கதிர் 095

## இனி இது ரகசியம் அல்ல!

நாடுமுழுவதும்ஞாயிறன்றுஏற்பட்ட திடீர் மின் தடையின் விளைவாக சுழற்சி முறையில் ஒன்றரை மணித்தியாலங்கள் மின்வெட்டு அமுல்படுத்தப்பட்டுள்ளது. ஒரு ☞ 2

# வடக்கு கிழக்கு இலங்கையின் ஓரங்கம் என்ற எண்ணம் வேரூன்றவேண்டும்

## அதுவே பிரச்சினை தீர வழி என்கிறார் விக்னேஸ்வரன்

வட, கிழக்கானது இலங்கையின் ஓரங்கமாகத் தொடர்ந்து இருப்பதே அதன் பாதுகாப்புக்கும், வருங்கால வாழ்க்கைக்கும் உசிதமானது என்ற எண்ணம் வேரூன்றிவிட்டால் தமிழ்த் தேசியக் கட்சிகள் பொதுவானதொரு அரசியல் குறிக்கோளை முன்வைப்பதில் சிக்கல்எதுவும்ஏற்படாது.அதனடிப்படையில் சகல தமிழ்த்தேசியக்கட்சிகளையும் உள்ளடக்கி புதியதொரு கூட்டமைப்பை உருவாக்குவது கடினமானதன்று. அதற்கமைய தமிழ்த்தேசியக்கட்சிகள் அனுபவமுள்ள படித்த, பண்புள்ள, சுயநலமற்ற பிரதிநிதிகளை புதிய கூட்டமைப்பில் உள்வாங்குவதற்கு வழியேற்படுத்தவேண்டும்.

என தமிழ் மக்கள் கூட்டணியின்



தலைவரும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான விக்கினேஸ்வரன் வலியுறுத்தியுள்ளார்.

கேள்வி - பதில் பகுதியில் தமிழ்த்தேசியக்கட்சிகளின்தற்போதைய நிலைமிகப்பரிதாபகரமாகஇருக்கிறது எனவும், தமிழ்த்தேசியம் மீண்டும் வலுப்பெற என்ன செய்யவேண்டும் எனவும்எழுப்பட்டிருக்கும்கேள்விக்கு அளித்திருக்கும் பதிலிலேயே சி.வி.விக்கினேஸ்வரன் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். இதுகுறித்து அவர் மேலும் கூறியிருப்பதாவது:

தமிழ்த்தேசியம் எனும் பதத்துக்கு பலவிதமான அரசியல் வியாக்கியாணங்கள்வழங்கப்பட்டிருக்கின்றன. உருத்திர குமாரனின் நாடு கடந்த தமிழீழ அரசு ☞ 2

### வவுனியா வடக்கு சபையில்

## சேர்ந்து போட்டியிடுவது குறித்து ஜனநாயகக் கூட்டணி ஆராய்வு

எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் வவுனியா வடக்கு பிரதேச சபையில் தமிழ் கட்சிகள் இணைந்து போட்டியிடுவது தொடர்பாக கலந்துரையாடவுள்ளதாக ஜனநாயக தமிழ்த்தேசிய கூட்டணி தெரிவித்துள்ளது.

ஜனநாயக தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளுக்கிடையிலான கலந்துரையாடல் ஒன்று வவுனியாவில் நேற்று இடம்பெற்றது. அதன் பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது: ☞ 8

## நாகைக்கான கப்பல் சேவை நாளை மீண்டும் தொடக்கம்

காங்கேசன்துறைக்கும், நாகைப்பட்டினத்துக்கும்இடையிலான படகுசேவை நாளை புதன்கிழமை முதல்மீண்டும்ஆரம்பமாகவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

'சுபம்' நிறுவனத்தின் தலைவர் சுந்தரராஜ் பொன்னுசுவாமி இது தொடர்பில் விடுத்துள்ள ☞ 2

# உள்ளூராட்சிச் சபை தேர்தலுக்கான துருப்புச் சீட்டா தையிட்டி விகாரை?

## அமைச்சர் சந்திரசேகரன் கேள்வி

**உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்கான துருப்புச் சீட்டாக தையிட்டி விகாரை விவகாரத்தைப்பயன்படுத்துகிறார்களா என்று கேள்வி எழுப்பியுள்ளார் மீன்பிடித்துறைஅமைச்சர்சந்திரசேகரன்.**

**அவர் யாழ்ப்பாண மாவட்ட செயலகத்தில் இன்று இடம்பெற்ற நிகழ்வொன்றில் பங்கேற்ற பின்னர் செய்தியாளர்களிடம் இதனைத் தெரிவித்தார்.**

**மேலும் தெரிவித்ததாவது:**

**யாழ்ப்பாணத்தில் இருக்கின்ற ஐந்து**



**லட்சத்துக்கு அதிகமான மக்களினுடைய விருப்பம் என்னவென்பதை நாங்கள் பார்க்கவேண்டும்.** ☞ 2

## தையிட்டியில் விகாரை அருகே இன்றும் நாளையும் போராட்டம்

யாழ்ப்பாணம் தையிட்டி சட்டவிரோத விகாரை அமைந்துள்ள மற்றும் அதனை சூழவுள்ள தமது காணிகளை மீள கையளிக்க கோரி காணி உரிமையாளர்கள் இன்று செவ்வாய்க்கிழமை (11) மற்றும் புதன் கிழமை (12) ஆகிய இரு நாட்களிலும் தொடர்போராட்டத்தில்ஈடுபடவுள்ளனர். அவர்களுக்கு ஆதரவாக அரசியல் கட்சிகளின் ஆதரவாளர்களும் போராட்டத்தில் கலந்துகொள்ளவுள்ளனர்.

தையிட்டி பகுதியில் உள்ள சுமார் 7 ஏக்கர் காணியை அடாத்தாக கையகப்படுத்தி , எவ்வித அனுமதிகளும் இன்றி சட்டவிரோதமாக திஸ்ஸ விகாரை எனும் விகாரை கட்டப்பட்டுள்ளது. மக்கள் இந்தப் பகுதியில் இருந்த போர் காரணமாக கடந்த 1990ஆம் ஆண்டு வெளியேறியிருந்தனர். பின்னர் அப்பகுதியை உயர்பாதுகாப்பு வலயமாக இராணுவத்தினர் ஆக்கிரமித்து வைத்திருந்தனர்.

போர் நிறைவடைந்த நிலையில் மக்கள் மீள்குடியேற, இராணுவத்தினர் கட்டம் கட்டமாக அனுமதித்தனர். அவ்வேளை தற்போது விகாரை அமைந்துள்ள மற்றும் அதனைச் சூழவுள்ள சுமார் 14 ஏக்கர் காணியில் மக்கள் மீள் குடியேற இதுவரை அனுமதிக்கப்படவில்லை. இந்தப்பகுதியில் எவ்வித அனுமதிகளும் இன்றி, யாழ் மாவட்ட மற்றும் தெல்லிப்பழை பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களில் விகாரையின் கட்டுமானப் பணிகளை நிறுத்தி , அப்பகுதிகளை ☞ 2

## மாவையின் சாவு வீட்டு அட்டூழியத்தில் பல உள்நாட்டு, வெளிநாட்டுச் சக்திகள்

### தமிழ் அரசுக் கட்சித் தலைவர் குற்றச்சாட்டு

மறைந்த தலைவர் மாவை.சேனதிராசாவின் இறுதிச்சடங்கு நடைபெற்ற மயானத்தில் கட்சியின் மூன்று நாடாளுமன்ற உறுப்பினர்கள் உட்பட மத்திய குழு உறுப்பினர்கள் 14 பேருக்கு எதிராக அநாமதேய பதாகையை காட்சிப்படுத்தியத்தின் பின்னணியில் உள்நாட்டு வெளிநாட்டு சக்திகள் பல காணப்படுகின்றன என்று இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் சிவஞானம் தெரிவித்துள்ளார்.

அத்துடன், தமது கட்சியைச் சிதைத்து ஓரங்கட்டுவதே அந்தச் சக்திகளின் பிரதான நோக்கமாக இருக்கின்றது என்பதை மக்கள் புரிந்துகொள்ள வேண்டும் என்றும் தெரிவித்த ☞ 2

## பட்டியல்கள் வெளியீடு மட்டும்போதாது அதன் மீது நடவடிக்கையும் அவசியம்

### சாணக்கியன் எம்.பி. ஆளும்தரப்பிடம் வலியுறுத்து

ஜனாதிபதி நிதியத்திலிருந்து முறைகேடாக நிதியைப் பெற்றிருக்கிறார்கள்என்றால்அந்த நிதியை மீளப்பெற வேண்டும். மதுபானசாலைகளுக்கு சட்டவிரோதமாக அனுமதிப் ☞ 2

## நீதிமன்றத்தின் முடிவை அறிவிக்க நாடாளுமன்றம் பெப். 14 கூடுகிறது

உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் (விசேட ஏற்பாடுகள்) சட்டமூலம் தொடர்பில் உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட மனுக்கள் மீதான தீர்மானத்தை சபாநாயகர் நாடாளுமன்றத்திற்கு அறிவிக்கும் வகையில் பெப்ரவரி 14 வெள்ளிக்கிழமை 9.30 மணிக்கு விசேடமாகப் நாடாளுமன்றம் கூட்டப்படவுள்ளது. இது குறித்து நாடாளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டதாக நாடாளுமன்றத்தின் பதில் செயலாளர் நாயகம் சமிந்த குலரத்ன தெரிவித்தார்.

பிரதி சபாநாயகர் (வைத்தியர்) ரிஸ்விசாலியின்தலைமையில் ☞ 8

### மன்னார் இரட்டைக் கொலை

## 7 சந்தேகநபர்களினது விளக்கமறியல் நீடிப்பு

மன்னார் நீதிமன்றத்துக்கு முன்பாக ஜனவரி 16 இருவர் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடைசந்தேகத்தில்கைதுசெய்யப்பட்டவர்களை பெப்ரவரி 24 வரை விளக்க மறியலில் வைக்குமாறு மன்னார் நீதிவான் திங்கட்கிழமை உத்தரவிட்டார்

கைதான7சந்தேகநபர்களில்முன்னதாகஐவர்ஆள் அடையாளஅணிவகுப்புக்குஉட்படுத்தப்பட்டிருந்தனர். ஏனைய இருவருக்கு ஆள் அடையாள அணிவகுப்பு நேற்று நடத்தப்படவிருந்தது. இந்த நிலையில் அடையாளத்தைக் காண்பிப்பதற்காக ☞ 8

## அறிக்கை கையளிப்பு

நாடளாவியரீதியில்ஞாயிற்றுக்கிழமைஏற்பட்ட திடீர்மின்வெட்டுதொடர்பானகுறுகியகாலஅறிக்கை மின்சக்தி அமைச்சிடம் கையளிக்கப்பட்டுள்ளதாக இலங்கை மின்சாரசபை தெரிவித்துள்ளது. ஒரே சந்தர்ப்பத்தில் இலங்கை முழுவதும் மின் தடை ஏற்பட்டமைக்கான காரணம் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாக இலங்கை சபையின் தலைவர் தலிக் சியம்பலாப்பிட்டி தெரிவித்துள்ளார்.

இனிவரும் நாட்களிலும் மின் விநியோகத் தடையை அமுல்படுத்த வேண்டியேற்படுமா என்பது தொடர்பிலும் இறுதித் தீர்மானம் எடுக்கப்படவுள்ளது. தற்போதுள்ள ☞ 2

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

குரங்கு பாய்ந்ததால் ஏற்பட்ட தடையா இது என்ற கேள்வி மக்களிடம் எழுந்திருக்கிறது. மீண்டும் மின் தடை, வரிசைகள் என்று வந்துவிடுமோ என்ற அச்சமும் ஏற்பட்டுள்ளது. ஆனால், இதற்குப் பிரதானமான காரணம் அதுவல்ல. குரங்கு பாய்ந்ததால் பாணந்துறை உபமின்நிலையத்தில் ஏற்பட்ட பிரச்சினையால் முதலில் மின் தடை ஏற்பட்டது. அதனால் பல பகுதிகளுக்கும் மின்சாரம் தடைப்பட்டது. அதேநேரத்தில் நாட்டில் பொருத்தப்பட்டுள்ள சூரிய மின்கலங்கள் மூலம் உற்பத்தி செய்யப்பட்ட மின்சாரம் தொடர்ந்தும் தேசிய மின் வலையமைப்பிற்குள் அனுப்பப்பட்டுக்கொண்டே இருந்தது.

அதாவது பயன்பாட்டுக்கு அதிகமான மின்சாரம் உற்பத்தி செய்யப்பட்டு அது தேசிய மின் கட்டமைப்பில் நுழைந்துகொண்டிருந்தது. பாணந்துறை உப மின் நிலையம் செயலிழந்ததால் பல பகுதிகளில் மின் தடை ஏற்பட்டு பின்னர் அங்கு செல்லவேண்டிய மின்சாரமும் தேசிய மின் கட்டமைப்புக்குள் முடங்கியதால் இந்த உபரி மின் உற்பத்தி சிக்கலாகி அதன் விளைவாக நுரைச்சோலை மின் உற்பத்தி நிலையத்திலுள்ள மின்பிறப்பாக்கிகளை பாதுகாப்பு ஒய்வு நிலைக்குக் கொண்டு சென்றுவிட்டது.

நுரைச்சோலை மின்பிறப்பாக்கிகளைப் பொறுத்தவரையில் அவை திடீரென நிறுத்தப்பட்டால் அவை குளிர்ந்த பின்னரே மீளஇயக்க முடியும். அவை குளிர்வதற்கு குறைந்தது மூன்று நாள்களாகவது ஆகும். இதற்கு முன்னரும் இலங்கை இந்தப் பிரச்சினையை எதிர்கொண்டு, இப்படி நுரைச்சோலை பின்பிறப்பாக்கிகள் குளிர்வதற்கான மூன்று நான்கு நாள்கள் காத்திருந்த வரலாறு உண்டு. அதன் பின்னரும் அத்தகைய ஒரு நிலையைச் சமாளிப்பதற்கான வழி வகை குறித்து ஆளும்தரப்புக்கள் ஆராயவுமில்லை நடவடிக்கை எடுக்கவுமில்லை.

இந்தப் பிரச்சினையைத்தான் மின்விநியோகக் கட்டமைப்பின் சமச்சீரின்மையால் ஏற்பட்ட கோளாறு என்ற விளக்கமளிக்கப்பார்க்கிறார்கள். நுரைச்சோலை மின்பிறப்பாக்கிகள் மீள இயங்கத் தொடங்கியதும் இந்தத் தற்காலிக மின் தடை நீக்கும் என்றே தெரிகிறது. ஆனால், மந்திகளுக்குக் குறைவில்லாத இந்த நாட்டில், மீண்டும் மின் தடை ஏற்படாது என்ற எதிர்பார்க்க முடியாது.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## உள்ளூராட்சிச்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பன்சல கட்டி முடிக்கப்பட்டிருக்கின்றது. அதில் பூஜை வழிபாடுகளும் தொடர்கின்றது. அன்றைய தினம் பேசாதவர்கள், நடவடிக்கை எடுக்காதவர்கள் இன்றைக்கு இதனைப் பூதாகரமான பிரச்சினையாக எழுப்புவதற்கு முயல்கின்றனர்.

உண்மையிலேயே இதனை இதயசுத்தியுடன் செய்கின்றார்களா அல்லது எதிர்வரும் நாட்களில் இவர்கள் உள்ளூராட்சி சபைத் தேர்தலில் இதனை துருப்புச் சீட்டாக பயன்படுத்த முயல்கின்றார்களா என்ற கேள்வி எழுகிறது.

மீண்டும் இனவாதத்தைதூண்ட முடியாது. இனவாதத்தைப் பயன்படுத்தி இலங்கையை பிளவுபடுத்தமுடியாது. நாட்டின் அபிவிருத்தியை பற்றிப் பேசமுடியாததால் இனவாத மதவாதத்தை தூண்டி மீண்டும் தங்களை நிலைநாட்டிக்கொள்ள சிலர் முயல்கின்றனர். அதனாலேயே எங்கள் ஆட்சியில் இந்தப் போராட்டங்கள் இடம்பெறுகின்றன.

இந்தப்பிரச்சினைக்குநாங்கள் மக்களோடு கலந்துரையாடி தீர்வை எட்ட முயல்கிறோம்.

விகாரை சட்டவிரோதமா அல்லது சட்ட ரீதியானதா என்று தனித்தனியான கருத்துக்களை சொல்ல முடியும். விகாரை அமைக்கப்பட்ட இடம் மக்களுடைய இடம் என்பதில் மாற்றுக் கருத்துக்கிடமில்லை. அந்த வகையில் நிச்சயமாக அந்த மக்களுக்கு அதற்குரிய நட்ட ஈடு மற்றும் காணிகளை வழங்க வேண்டிய தேவை இருக்கின்றது.

விகாரையை உடைப்பதன் மூலம் தையிட்டிப் பிரச்சினைக்குத் தீர்வு வருமா என்பது கேள்விக்குறியே. ஆகவே சுமூகமான தீர்வை எட்ட வேண்டுமே தவிர மீண்டும் இனவாதத்தையும் மதவாதத்தையும் வளர்க்கக்கூடிய தீர்வை முன்னெடுக்க கூடாது - என்றார்.

## நாகைக்கான....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

காங்கேசன்துறைக்கும், நாகைப்பட்டினத்துக்கும் இடையிலான படகுசேவை பெப்ரவரி 12 புதன்கிழமை முதல் ஆரம்பமாகவுள்ளது. மீள ஆரம்பிக்கப்படும் இந்தச் சேவையானது வாரத்துக்கு ஆறு நாட்கள் இடம்பெறவுள்ளது.

பயணச்சீட்டுக்களை இணையத்தளம் மூலமாக முற்பதிவு செய்துகொள்ள முடியும் - என்றுள்ளது.

## பட்டியல்கள்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பத்திரங்கள் வழங்கப்பட்டிருந்தால் அந்த அனுமதிப் பத்திரங்களை இரத்துச் செய்யவேண்டும் என இலங்கை தமிழ் அரசு கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு எருவில் கல்வி அபிவிருத்தி ஒன்றியம் ஏற்பாடு செய்திருந்த பரிசளிப்பு விழா ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. இதில் கலந்துகொண்டு கருத்துத்தெரிவிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

அரசியல்வாதிகளுக்கு மதுபான அனுமதிப் பத்திரங்கள் வழங்கப்பட்டதாகச் சொல்லப்பட்டது. யார் பெயரில் அவை வழங்கப்பட்டன என்ற பட்டியலையும் வாசித்தார்கள். அதற்குப் பிறகு எந்த நடவடிக்கையையும் காணவில்லை. ஜனாதிபதி நிதியத்தில் இருந்து அரசியல்வாதிகள் பணம் பெற்றதாக ஒரு பட்டியல் வாசிக்கப்பட்டது. அதன் பின்னரும் ஒன்றும் நடைபெறவில்லை.

பட்டியல்களை அனைவரும் வெளியிடலாம். ஆனால், அவர்களிடம் இருக்கின்ற பணத்தினை மீளப்பெறவேண்டும். மக்களுடைய பணத்தை முறைகேடாக நட்டஈடாக எடுத்திருக்கிறார்கள் என்றால் ஆளும்தரப்பில் இருப்பவர்கள் பட்டியல்களை வெளியிட்டால் மாத்திரம் போதாது. நிதியைப் பெற்றவர்களிடம் இருந்து அதனை மீளப் பெறவேண்டும். அதனைப் பெற்று மக்களுக்கு வழங்கவேண்டும்.

மதுபானசாலைகளுக்கு அரசியல் இலஞ்சமாக அனுமதிப் பத்திரங்கள் வழங்கப்பட்டிருந்தால் அந்த அனுமதிப் பத்திரங்களை இரத்துச் செய்யவேண்டும். அதைவிட்டுவிட்டு ஆளும்தரப்பில் இருக்கின்ற அமைச்சர்கள் நாடாளுமன்றத்துக்கு வந்து பட்டியல்களை வாசிப்பதன் ஊடாக ஊழல் மோசடிகளை ஒழிக்கமுடியாது.

இந்த ஆளும்தரப்பைக் குழப்புவதற்கோ, ஆட்சிக்கு எதிராக கருத்துக்களை வெளியிடுவதற்காகவோ நாங்கள் வரவில்லை. சில ஊடகங்கள் ஆளும்தரப்பு செய்யும் எல்லா விடயங்களும் சரிஎனுமளவிற்குச் செய்திகளை வெளியிடுகின்றன. அது கவலையான விடயம். அரச ஊடகம் என்றாலும் சமமாக செய்திகளை வெளியிடவேண்டும் -என்றார்.

## அறிக்கை .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிலவரத்தின் அடிப்படையில் ஏற்படக் கூடிய அவசர மின் தடை தொடர்பிலும் மதிப்பாய்வு செய்யப்பட்டு வருகிறது. அதற்கமைய நாளாந்தம் மின்சாரத்தை வழங்குவது தொடர்பில் விரைவில் மின்சாரசபை அறிவிக்கும் என தலிக் சியம்பலாப்பிட்டி மேலும் தெரிவித்துள்ளார்.

இதேவேளைதிடீர் மின் தடை தொடர்பில் இலங்கை மின்சார சபையின் பொறியியலாளர் சங்கம் அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளது. ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் வேளையில் காணப்படும் குறைந்த மின்சாரத் தேவையும், ஒப்பீட்டளவில் சூரிய சக்தியின் நிலைத்தன்மையும் மொத்த மின்சார உற்பத்தியில் அதிக சதவீதத்தை உற்பத்தி செய்தமையால் ஏற்பட்ட சமநிலையற்ற தன்மையுமே அதற்கான காரணம் என அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இருப்பினும், இந்த நிலைமையை முறையான விசாரணை மூலம் உறுதிப்படுத்தவேண்டும் என்றும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. பாணந்துறை துணை மின் நிலையத்தில் ஏற்பட்ட திடீர் மின் தடை காரணமாக குறைந்த மின்சார தேவை மற்றும் அதிக சூரிய மின் உற்பத்தி காரணமாக தேசிய மின்சார கட்டமைப்பு சமநிலையற்றதாக மாறியது. இதன் விளைவாக நாடு முழுவதும் மின் தடை ஏற்பட்டது.

எதிர்காலத்தில் இதுபோன்ற மின்வெட்டு ஏற்படாமல் தடுக்க தேவையான நடவடிக்கைகளை எடுப்பதற்கு, மின்சார சேமிப்பு மின்கல வசதிகள் உள்ளிட்ட திட்டங்களைவிரைவுபடுத்தஇலங்கைமின்சார சபையும் வலுசக்தி அமைச்சும் ஏற்கனவே இணைந்து செயல்பட்டு வருவதாக அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தையிட்டியில்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மக்களிடம் மீள ஒப்படைக்குமாறு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

காணிகள் மீள கையளிக்கப்படாது, இராணுவத்தினரின் உதவியுடன் விகாரை கட்டி முடிக்கப்பட்டுள்ளது. குறித்த விகாரை அமைந்துள்ள காணி மற்றும் அதனைச் சூழவுள்ள காணிகளான 14 ஏக்கர் காணியையும் காணி உரிமையாளர்களிடம் மீள கையளிக்க வேண்டும் என காணி உரிமையாளர்கள் சுமார் ஒரு வருட காலத்திற்கு மேலாக போராட்டத்தை முன்னெடுத்து வருகின்றனர்.

இந்நிலையில் செவ்வாய்க்கிழமை(11) மற்றும் புதன்கிழமை(12) ஆகிய இரு நாட்களும் தொடர் போராட்டங்களை முன்னெடுக்கவுள்ளதாகவும் அதற்கு அனைத்து தரப்பினரும் ஆதரவு தெரிவித்து போராடத்தில் ஈடுபட வேண்டும் என காணி உரிமையாளர்கள் கோரிக்கைவிடுத்துள்ளனர்.

காணி உரிமையாளர்களின் கோரிக்கையை அடுத்து, பல்வேறுதரப்பினரும் போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்துள்ளனர்.

இதேவேளை குறித்த விகாரை அமைந்துள்ள காணி மற்றும் அதனைச் சூழவுள்ள சுமார் 14 ஏக்கர் காணியும் விகாரைக்கு வழங்க வேண்டும் எனவும், அதில் யாத்திரிகள் தங்குமிடம், மடாலயங்கள் , பூங்காக்கள் அமைக்கப்படவுள்ளதாகவும் அகில இலங்கை பௌத்த மகா சம்மேளனம் என்ற அமைப்பு யாழ். மாவட்ட செயலரிடம் கடிதம் மூலம் கோரியுள்ளது. குறித்த அமைப்பின் தலைவர் தேசிய புலனாய்வு பிரிவின் முன்னாள் பணிப்பாளர் எனவும், பிரதி பொலிஸ்மா அதிபராக கடமையாற்றி இருந்தவர் எனவும் நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

## வடக்கு ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜனநாயக, மதச்சார்பற்ற தமிழீழ அரசொன்றை ஏற்படுத்தவேண்டும் என்ற முனைப்புடன் அதற்காகப் பாடுபட்டுக்கொண்டிருக்கிறது. அவர்களது தமிழ்த் தேசியம் பிரிவினை சார்ந்தது. அவர்கள் இனிமேல் சிங்கள மக்களுடன் சேர்ந்து வாழமுடியாது என்ற முடிவுக்கு வந்துவிட்டார்கள்.

உள்நாட்டிலும், சர்வதேச நாடுகளிலும் இயங்கிவரும் வேறுபல தமிழர் அமைப்புக்களும் அந்த நிலைப்பாட்டிலேயே இருக்கிறார்கள். வட்டுக்கோட்டைத் தீர்மானமும் தமிழீழத்தையே வலியுறுத்தியது. அதனையடுத்தே 6ஆவது திருத்தம் கொண்டுவரப்பட்டது. பிரிவினை கோருவது சட்டப்படி குற்றமாக்கப்பட்டது. ஆகவே உள்நாட்டில் இயங்கிவரும் சகல தமிழ்த் தேசியக் கட்சிகளும் இப்போது தமது குறிக்கோள் சமஷ்டியே என்றுகூறிவருகின்றன. அவர்கள் அனைவரும் எமது நாட்டுக்கு சமஷ்டி அரசமைப்பு அவசியம் எனும் ஒத்த முடிவை எடுத்திருக்கிறார்கள்.

எனது கட்சி மாத்திரம் கூட்டு சமஷ்டியை வலியுறுத்தியுள்ளது. வட, கிழக்கு மக்கள் வெளியகத் தரப்பினரின் தலையீடின்றி ஒரே நாட்டினுள் தம்மைத்தாமே ஆளும் உரித்தைப் பெறவேண்டும் என்பதே சகல தமிழ்த்தேசியக் கட்சிகளினதும் குறிக்கோளாகும்.

இலங்கையில் தமிழ்மொழி சுமார் மூவாயிரம் ஆண்டுகளாகப் பேசப்பட்டுவந்திருக்கிறது. ஆனால் அப்போது சிங்களவர் என்ற மக்கள் கூட்டம் இருக்கவில்லை. மாறாக தமிழ்மொழி பேசிய மக்கள்தான் 6 ஆம், 7 ஆம் நூற்றாண்டுகளில் சிங்களமொழி பேச முற்பட்டனர். பௌத்த மொழியான பாளி மொழி தமிழ்மொழியுடன் கலந்தமையினாலேயே சிங்களமொழி உருவானது.

தமிழ்த் தேசியம் என்பது வட, கிழக்கு மாகாணங்கள் பாரம்பரியமாகத் தமிழ்பேசும் இடங்கள், அங்கிருப்பவர்கள் தமிழ்மொழியினால் பரிபாலிக்கப்படவேண்டியவர்கள், அவர்களுக்கு அந்தப் பாரம்பரிய நிலங்களின் தன்னாட்சி வழங்கப்படவேண்டும் என்பதை அடிப்படைக்கொள்கையாகக் கொண்டதாகும். தன்னாட்சி எனும்போது, அது நாட்டைப் பிரிப்பதாக அமையும் என்ற அச்சம் சிங்கள மக்களுக்கு உண்டு. ஆனால் உண்மையில் வட, கிழக்கில் பெரும்பான்மையினர் தமிழ்மொழி பேசுவோர் என்றதால், இந்தப் பிரிவினை ஏற்கனவே உண்டு என்பது புலப்படும்.

இதனை சிங்களத் தலைவர்களுக்குப் புரியவைத்து, தமிழ்பேசும் இடங்களும், அங்கு வாழும் மக்களும் சமூக மற்றும் பொருளாதார ரீதியில் மேம்படுவதற்கு அரசியல் ரீதியான மாற்றங்கள் மேற்கொள்ளப்படவேண்டும் என்பதை உணர்த்துவதற்கு எமது அரசியல் பலம் மேம்படவேண்டும். எமக்குள் வேற்றுமைகள் இருந்தால் எமது பலம் குன்றிவிடும். ஆனால் உண்மையில் எமக்குள் குறிக்கோளில் வேற்றுமை இல்லை. மாறாக சுயநல சிந்தனைகளில்தான் வேற்றுமை உள்ளது.

இன்றளவிலே தமிழ்த் தேசியக் கட்சிகளின் தலைவர்கள் தமது தனித்துவக் கட்சியின் முன்னுரிமையையே வலியுறுத்தி வருகிறார்கள். வட, கிழக்கு மக்கள் மற்றைய கட்சிகளைப் புறக்கணித்துத் தமது கட்சிக்கே வாக்களிக்கவேண்டும் என்று அவர்கள் எண்ணுகிறார்கள். ஆனால் நடைபெற்று முடிந்த தேர்தலில் அந்த எதிர்பார்ப்புக்கு எதிராக மக்கள் தற்போதைய ஆளுங்கட்சிக்கு வாக்களித்தார்கள். தமிழ் மக்களின் அரசியல் எதிர்பார்ப்புக்கு முரணாக ஒற்றையாட்சியை வலியுறுத்திய அக்கட்சிக்கு தமிழர்கள் வாக்களித்தனர். எது எவ்வாறெனினும் கடந்த நாடாளுமன்றத் தேர்தல் முடிவுகள் தமிழ் வாக்காளர்களின் விரக்தி மனப்பான்மையையே அடிக்கோடிட்டுக் காண்பிக்கின்றன.

இந்நிலையில் தமிழ்த் தேசியக் கட்சிகள் இணைந்துபேசி தமது அரசியல் குறிக்கோள்கள் எவையென்பதை அறியவேண்டும். அதன்போது தனிப்பட்ட நலன்களைப் புறந்தள்ளி தமிழ் பேசும் மக்களின் நலன்கருதி தீர்மானம் மேற்கொள்ளவேண்டும். யதார்த்தமாக சிந்தித்து, வட, கிழக்கானது இலங்கையின் ஓரங்கமாகத் தொடர்ந்து இருப்பதே அதன் பாதுகாப்புக்கும், வருங்கால வாழ்க்கைக்கும் உசிதமானது என்ற எண்ணம் வேரூன்றிவிட்டால் தமிழ்த் தேசியக் கட்சிகள் பொதுவானதொரு அரசியல் குறிக்கோளை முன்வைப்பதில் சிக்கல் எதுவும் ஏற்படாது. அதனடிப்படையில் சகல தமிழ்த் தேசியக் கட்சிகளையும் உள்ளடக்கி புதியதொரு கூட்டமைப்பை உருவாக்குவது கடினமானதன்று. அதற்கமைய தமிழ்த்தேசியக் கட்சிகள் அனுபவமுள்ள படித்த, பண்புள்ள, சுயநலமற்ற பிரதிநிதிகளை புதிய கூட்டமைப்பில் உள்வாங்குவதற்கு வழியேற்படுத்தவேண்டும். உணர்ச்சிகளுக்கும், சுயலாபத்துக்கும் இடம்கொடுக்காது தமிழ் மக்களின் வருங்காலம் கருதி பேச்சுக்கள் அறிவுபூர்வமாக அமையவேண்டும்.

ஒவ்வொரு கட்சியும் மூன்றுக்கு மேற்படாமல் தமது பிரதிநிதிகளை உடனடியாக சிபாரிசு செய்யவேண்டும். அவர்கள் இணைந்து தமக்குள் இருந்து ஒரு தவிசாளரை நியமிக்கவேண்டும். இக்குழு கட்சிகளின் சார்பில் ஆளும்தரப்புடன் பேச்சுக்களில் ஈடுபடவேண்டும். பிரதிநிதிகள் அரசியல்வாதிகள் அல்லாததால், ஆளும்தரப்பும் விடயம் அறிந்த உறுப்பினர்களை அல்லது அலுவலர்களை நியமிப்பார்கள். அவர்கள் இணைந்து முன்வைக்கும் முன்மொழிவு அனைத்துக் கட்சிகளாலும் பரிசீலிக்கப்படும். அதனைத் தொடர்ந்து தமிழ் மக்களுக்கு எவ்வாறான அதிகாரப்பகிர்வு வழங்கப்படவேண்டும் என ஆளும்தரப்பு சகல கட்சிகளுடனும் பேச்சு நடத்தித் தீர்மானிக்கலாம். இதற்குரிய ஆரம்பகட்ட வேலைகளை எமது பல்கலைக்கழகப் புத்திஜீவிகள் ஆரம்பிக்கவேண்டும் என்று வலியுறுத்தியுள்ளார்.

## மாவையின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர், எனவே இது தொடர்பில் முழுமையான விசாரணைகள் அவசியம் என்றும் வலியுறுத்தினார்.

யாழ். நல்லூரில் உள்ள அவரது இல்லத்தில் நேற்று செய்தியாளர்களிடம் பேசிய அவர் மேலும் தெரிவித்ததாவது:

இந்திய குடியரசு தினமான ஜனவரி 26 யாழ்.இந்திய துணைத் தூதரகத்தில் நடைபெற்ற நிகழ்வில் பங்கேற்பதற்குச் செல்வதற்காக கட்சியின் செயலாளர் சத்தியலிங்கம் எனது வீட்டிற்கு வருகை தந்திருந்தார். அன்றைய தினம் நானும், அவரும் சுகயீனமுற்றிருந்த சேனாதிராசாவை நேரில் பார்வையிடுவதற்காகச் சென்றிருந்தோம்.

தொடர்ச்சி 8 ம் பக்கம்.....

காலைக்கதிர்
Kalaikkathir

# அனைத்து இன மக்களையும் தோழமையுடன் அனுர அரசு கையாளும் என்பதில் ஐயமில்லை

## சர்வதேச இந்துமத பீடம் தெரிவிப்பு

தேசிய மக்கள் சக்தி உறுப்பினர்கள் தம்மிடையே தமது உறுப்பினர்களிடையே ஒருவருடன் ஒருவர் பேசி பழகும் போது சகோதரயா என விழித்து வாஞ்சையுடன் சமத்துவ உணர்வு புலப்படும் வண்ணம் பழகிக்கொள்கிறார்கள். இதன் மூலம் தம்மிடையே ஏற்றத்தாழ்வுகள் எதுவும் இல்லை அனைவரையும் சம நோக்கோடு பார்க்கும் ஒரு தெளிவான பார்வையை தமக்குள் கொண்டிருக்கிறார்கள்.

இந்த வகையில் அனுர அரசு இலங்கைவாழ் அணைத்து மக்களையும் எப்படி தமது கட்சியினரை சமத்துவகண்கொண்டுசமநோக்காகசம அந்தஸ்துடன் பழகுகின்றர்களோ அதே போன்று ஏனைய மக்களையும் சம நோக்கோடு சம அந்தஸ்த்தோடு அணைத்து விடயங்களிலும் கையாளுவார்கள் என்பதில் சந்தேகம் இல்லை என சர்வதேச இந்துமத பீடதின் செயலாளர் சிவஸ்ரீ ராமசந்திர குருக்கள் பாபுசர்மா தெரிவித்துள்ளார்.

மேலும் ஜனாதிபதி யாழ் நகர் சென்ற போது விரைவில் காணி உரித்தனவர்களின் நிலபரப்பு விடுவிக்கப்படும் என கருத்து தெரிவித்திருந்தார்.

அதேவேளை காணாமலாக்கப்பட்டோருக்கான நியாயமான ஒரு தீர்வும் அதேபோன்று அரசியல் கைதி விடுதலை சம்மந்தமாக ஆகபூர்வமாக நடவடிக்கைகளும் எடுப்பதன் மூலம் இந்த சகோதர வாஞ்சை உணர்வை வெளிப்படுத்தும் சந்தர்ப்பர்களாக அமையும் அதேவேளை தமிழ் அரச உத்தியோகாதர்களின் நியமணம் தமிழ் பேசும் பகுதியில் கூடுதலாக நியமிப்பது பற்றிய கருத்தும் வெளியிடப்பட்டது.

இந்த கருத்தும் வரவேற்கத்தக்கது. இப்படியான படிப்படியான நல்ல செயல்பாடுகள் அணைவரையும் ஒரு தாய் மக்களாக சகோதரயா என்ற வாஞ்சை உணர்வை ஏற்படுத்தி சமத்துவமாக அணைவரையும் வாழ்வதற்கான அடிப்படை அம்சமாக நிச்சயமாக ஜனாதிபதி அனுர குமார திசைனாயக மேற்கொள்வார் என்பதில் ஐயமில்ல என பாபுசர்மா தெரிவித்துள்ளார்.

# தமிழ் மக்கள் மீதான அக்கறையுடன் செயற்பட்டவர் ஊடகவியலாளர் பாரதி

## இந்து மதக் குருமார் ஒன்றியம் அஞ்சலி

ஞாயிறு தினக்குரல் பத்திரிகையின் பிரதம ஆசிரியராக இருந்த காலத்தில் பாரதியுடனான அறிமுகம் எனக்கு ஏற்பட்டது. எப்பொழுதும் தமிழ் மக்கள் மீதான அக்கறையுடனான அவரது சிந்தனை என்னுடன் கலந்துரையாடும் பொழுது இருந்துகொண்டே இருக்கும். குறிப்பாக வடக்கு கிழக்கு வாழ் தமிழ் மக்களின் அரசியல் பிரச்சினைகள் பற்றி கூடுதலாக என்னுடன் உரையாடுவார் . அவருடன் ஏற்பட்ட நட்பு காரணமாக பல சோதிடவியல் ரீதியான கட்டுரைகள் தொடர்ந்து எழுதக்கூடிய சந்தர்ப்பத்தை அவர் எனக்கு ஏற்படுத்தி தந்திருந்தார்.

- இவ்வாறு தனது அனுதாபச் செய்தியில் தெரிவித்துள்ளார் சர்வதேச இந்மு மதகுரு பீடத்தைச் சேர்ந்த பாபுசர்மா.

அந்த அஞ்சலி செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு -

அதேவேளை, நான் ஜனாதிபதியின் இந்துமத விவகார இணைப்பாளராக இருந்தபொழுது பல நேர்காணலையும் அவர் எனக்கு ஏற்படுத்தி தந்திருந்தார்.

எப்பொழுதும் ஊடக தர்மத்தை கடைபிடிக்கும் அவர் தனது பெயருக்கும் தான் சார்ந்த பத்திரிகைக்கும் கலங்கம் இல்லாமல் ஊடக தர்மவாதியாக அவர் செயலாற்றயமை என் கண்கூடாக நான் பார்த்த அனுபவம். எனக்கு அவர் பற்றிய எண்னக்காரு என் மனதில் பதிந்தது. அவரது திடீர் இழப்பு பெரும் அதிச்சியை ஏற்படுத்தி ஊடகங்களுக்கே பெரும் சோக அலைகளை ஏற்படுத்தியிருக்கிறது.

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்தனை செய்து ஸ்ரீவித்யா குருகுலம் மற்றும் சர்வதேச இந்துமத பீடம் சார்பாக அனுதாபங்களை தெரிவித்துக்கொள்வதாக கலாநிதி சிவஸ்ரீ ராமசந்திர குருக்கள் பாபுசர்மா தெரிவித்துள்ளார்.

# ஆலையடிவேம்பு ப.நோ.கூ. சங்க வருடாந்த பொதுச்சபை கூட்டம்

(அஸ்லம்)

ஆலையடிவேம்பு பல நோக்கு கூட்டுறவு சங்கத்தின் வருடாந்த பொதுச் சபை கூட்டம் அதன் தலைவர் நா. ஏரம்பமூர்த்தி தலைமையில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம அதிதியாக கல்முனை கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் அலுவலக தலைமை கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் எம்.சி.ஜலால்டீன், கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர்களான ஏ.நடராசலிங்கம்,





எஸ்.எல். நஜீமா, எஸ். ஜாபீர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

2025 ஆம் வருடத்திற்கான வரவு செலவுத்திட்டம், உச்சக்கடன் எல்லை, 2023 ஆம் ஆண்டுக்கான கணக்காய்வு அறிக்கை உட்பட ஏனைய அபிவிருத்தி செயற்திட்டங்கள் என்பனவும் பொதுச்சபையினரால் இதன்போது ஏற்றுக்கொள்ளப்பட்டது.

# மரத்தின் வேந்தர்களுக்கு அட்டாளைச்சேனையில் விழா

(நூருல் ஹுதா உமர்)

கடந்த பொதுத் தேர்தலில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்ற நாடாளுமன்ற உறுப்பினர்களை கௌரவிக்கும் நிகழ்வு 'மரத்தின் வேந்தர்களுக்கு மண்ணின் பெருவிழா' எனும் தொனிப்பொருளில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் அட்டாளைச்சேனை மத்திய குழு ஏற்பாட்டில் அட்டாளைச்சேனை மீலாத் சதுக்கத்தில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

இந்நிகழ்வில், பத்தாவது நாடாளுமன்றத்தை அலங்கரிக்கும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர்களான கட்சியின் தலைவர் ரவூப் ஹக்கீம், கட்சியின் பிரதித் தலைவர் எம்.எஸ்.எம் ஹிஸ்புல்லாஹ், செயலாளர் எம். நிசாம் காரியப்பர், பிரதி தேசிய அமைப்பாளர் எம்.எஸ் உதுமாலெப்பை மற்றும் தேசிய இணைப்புச் செயலாளர் எம்.எஸ் நழீம் ஆகியோர் இவ்வரலாற்று பெருவிழாவில் கட்சி போராளிகள் மற்றும் பெருந்திரளான மக்கள் புடைசூழ ஊர்வலமாக அழைத்து வரப்பட்டு பாராட்டி கௌரவிக்கப்பட்டனர்.

இந்நிகழ்வில், முன்னால் நாடாளுமன்ற உறுப்பினர்கள், கட்சியின் உயர்பீட உறுப்பினர்கள் மற்றும் பெருந்திரளான கட்சியின் ஆதரவாளர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.







# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## அமிலச்சோதனை

விகாரையை உடைத்து நொருக்குவதால் பிரச்சினைகளுக்கு தீர்வு கிடைக்குமா என்பது பற்றியும் சிந்திக்க வேண்டியுள்ளது. ஆகவே சுமூகமான தீர்வொன்றினை மேற்கொள்ள வேண்டும். இனவாதம், மதவாதம் தலைதூக்குவதற்கு இடமளிக்கக்கூடாது என்று தெரிவித்திருக்கிறார் மீன்பிடித்துறை அமைச்சர் சந்திரசேகரன்.

"முதலில்யாழ்ப்பாணத்தில்உள்ளமக்களின்கருத்துஎன்னவென்பதை நாம் பார்க்க வேண்டும். தையிட்டியில் விகாரை கட்டப்படும்போது அதுதொடர்பில் நடவடிக்கைகளை முன்னெடுக்காதவர்கள் தற்போது அந்தப் பிரச்சினையை பூதகரமாக தூக்கிப்பிடிக்கின்றார்கள்.

தையிட்டிவிகாரைவிடயத்தினைதூக்கிப்பிடிப்பவர்கள்உண்மையிலேயே அந்த விடயத்தினை முன்னெடுக்கின்றார்களா? இல்லை விரைவில் உள்ளூராட்சிமன்றங்களுக்கான தேர்தல் வரவிருப்பதால் அதற்கான துருப்புச்சீட்டாக இதனைப் பயன்படுத்தப் பார்க்கின்றார்களா?

தையிட்டி விகாரை விடயம் இனவாதத்தினை, மதவாத்தினை தூண்டக்கூடியது. இனவாதத்தினையும், மதவாத்தினையும் மக்கள் தோற்கடித்திருக்கின்றார்கள். அதுமட்டுமன்றி, நாட்டின் அபிவிருத்தி வேகமாக முன்னெடுக்கப்படுகின்றது.ஆகவே அதுபற்றிக் கதைப்பதற்கு ஒன்றுமில்லை. அந்த வகையில் மதவாத்தினை இலகுவாகத் தூண்டி அதன் மூலமாக அரசியல் இலாபத்தைப் பெற்றுக்கொள்ளவே பார்க்கின்றார்கள்.

எவ்வாறாக இருந்தாலும் எமது அரசாங்கத்தின் கீழேயே இந்தப்பிரச்சினைக்கும் தீர்வினை எட்டுவதற்கு நடவடிக்கைகளை முன்னெடுக்கவுள்ளோம். மக்களுடன் கலந்துரையாடி, மக்கள் பரிந்துரைக்கும் தீர்மானத்துக்கு செல்வதற்கு நாம் தயாராகவே உள்ளோம்.

விகாரை அமைக்கப்பட்டமை சட்டவிரேதமானதா இல்லையா என்பது தொடர்பில் நாம் ஒவ்வொருவரும் தனிப்பட்ட கருத்துக்களை முன்வைக்க முடியும். ஆனால், விகாரை அமைக்கப்பட்டுள்ள நிலமானது மக்களுடையது என்பதில் மாற்றுக்கருத்துக்கு இடமில்லை. அதனால் அந்தக் நிலத்துக்குச் சொந்தக்காரர்களுக்கு மாற்றுக் காணிகளை அல்லது நட்டஈட்டை வழங்க வேண்டிய தேவையுள்ளது.

விகாரையை உடைத்து நொருக்குவதால் பிரச்சினைகளுக்கு தீர்வு கிடைக்குமா என்பது பற்றியும் சிந்திக்க வேண்டியுள்ளது. ஆகவே சுமூகமான தீர்வொன்றினை மேற்கொள்ள வேண்டும். இனவாதம், மதவாதம் தலைதூக்குவதற்கு இடமளிக்கக்கூடாது. அதில் நாம் உறுதியாக இருக்கின்றோம்" என்றார்.

அவர் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவரல்லர் என்பதால் இந்த விகாரை தொடர்பாக அவருக்கு முழுமையான விவரம் தெரிந்திருக்க வாய்ப்பில்லை. விகாரை கட்டப்படத் தொடங்கிய காலத்திலிருந்தே இதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டு வருகின்றது. அந்தக் காணிகள் தனியாருடையவை எனவே அங்கு விகாரை கட்டப்பட முடியாது என்று பிரதேச சபையிலும் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுவிலும் எதிர்ப்புக் காட்டப்பட்டது. அதுபோன்றே அங்கிருந்து பரிந்துரைக்கப்பட்ட அடிப்படையில் யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்திலும் எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டது.

அப்போது அந்தக் காணிகள் படையினரின் முழுக் கட்டுப்பாட்டில் இருந்தன. அதனால் படைத்தளபதிகள் மற்றும் படையினரின் உதவியுடன் அங்கு விகாரை அமைக்கப்பட்டது. அதனால் அதற்குள் சென்று போராட்டம் நடத்த மக்களால் முடியவில்லை. சாத்தியமான எல்லா வழிகளிலும் அவர்கள் எதிர்ப்புத் தெரிவித்து வருகின்றார்கள். விகாரையைச் சுற்றியுள்ள காணிகள் விடுவிக்கப்பட்ட பின்னர் கடந்த ஓரிரு வருடங்களாக அந்த விகாரையின் அருகில் தொடர்ந்து பௌர்ணமி தினங்களில் போராட்டம் இடம்பெற்று வருகின்றது. இந்த வரலாற்றை மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுவின் பழைய கூட்ட அறிக்கைகளில் இருந்தே அமைச்சர் தெரிந்துகொள்ள முடியும்.

இதுவரை இருந்த ஆளும்தரப்புக்கள் நீதியானவை அல்ல, அவை தமிழர்களுக்கு நியாயம் வழங்க மாட்டா என்று கருதியதால் அவற்றிடமிருந்து தமக்கு இந்த விடயத்தில் தீர்வு கிடைக்காது என்று தமிழ் மக்கள் கருதினார்கள். அந்தப் போக்கிலிருந்து தேசிய மக்கள் சக்தி வேறுபட்டிருக்கும் என்றே தமிழர்களில் ஒருபகுதியினர் நம்பி வாக்களித்தார்கள். அந்த நம்பிக்கை மீதான அமிலச் சோதனையைத்தான் இப்போது அவர்கள் நடத்துகின்றார்கள். தான் தமிழர்கள் தொடர்பில் வழங்கிய வாக்குறுதியை தேசிய மக்கள் சக்தி ஆளும்தரப்பு நிறைவேற்றுமா என்று அவர்கள் சோதிக்கிறார்கள்.

அதற்குச்சரியானவழியில்பதிலளிப்பதைவிடுத்து, இதுதேர்தலுக்கான நாடகம், இனவாதம், மதவாதம், நட்டஈடு என்றெல்லாம் அமைச்சர் பேசக்கூடாது. தையிட்டில் நடந்தது ஆக்கிரமிப்பு. தனியார் காணிகள் அவர்களின் சொந்த விருப்பம் கேட்டகப்பட்டுப் பெறப்படவில்லை. அரச சுவீகரிப்புச் சட்டங்களின் கீழும் கையகப்படுத்தப்படவில்லை. ஆனால் அரச படை அதிகாரிகளின் துணையுடன் சில பிக்குகளால் ஆக்கிரமிக்கப்பட்டது. இந்த நிலையில் அந்த விகாரையை நியாயப்படுத்துவது, அநீதிக்கு ஆளும்தரப்பே துணை நிற்கும் போக்கு. இந்த அமைச்சர் சொல்வதைப் போன்று மக்களுடன் பேசி ஆளும்தரப்பு ஒரு தீர்வுக்குச் செல்லமுடியும். ஆனால், இந்த விவகாரத்தில் குற்றமிழைத்தவர்களுக்கு என்ன தண்டனை. தமது அதிகாரத்தை துஸ்பிரயோகம் செய்த படை அதிகாரிகள் மீதும் பிக்குகள் மீதும் சட்ட நடவடிக்கை எடுக்கும் துணிபு ஆளும்தரப்புக்கு உண்டா? விகாரையை உடைக்க முடியாது என்று அவசரமாக அறிக்கைவிடும் ஆளும்தரப்பு, அதேபோன்று சட்டவிரோத விகாரையைக் கட்டியவர்களைக் கைது செய்து சிறையில் அடைப்போம் என்று அறிக்கை விடுமா?

# மரதன் ஓட்டப் போட்டி

(சியாஜ்)

புத்தளம் தெற்குக் கல்விக் கோட்டத்திற்குட்பட்ட கனமூலை முஸ்லிம் மகா வித்தியாலயத்தின் வருடாந்த இல்லங்களுக்கிடையிலான மெய்வல்லுனர் விளையாட்டுப் போட்டியின் முதல் நாள் போட்டியாகமரதன்ஓட்டம்வெள்ளிக்கிழமை பாடசாலையின் அதிபர் பீ.ணே.எம். முஸ்னி தலைமையில் இடம்பெற்றது.

இதில் சம்ஸ், கமர், நஜ்ம் ஆகிய இல்லங்களைச் சேர்ந்த முப்பது மாணவர்கள் போட்டியில் பங்கு பற்றியதுடன் சுமார் 5 கிலோ தூரம் கொண்டதாக இம் மரதன் ஓட்டப் போட்டி அமைந்திருந்தது.

அதன்படி நஜ்ம் இல்லத்தைச் சேர்ந்த மாணவன் எம்.ஐ.எம். இல்ஹாம் முதலாம் இடத்தையும், அதே இல்லத்தைச் சேர்ந்த மாணவன் எம்.எட்.எம். ஜாஸிம் இரண்டாம் இடத்தையும், சம்ஸ் இல்லத்தைச் சேர்ந்த மாணவன் ஏ.எல்.எம். சிஹான் மூன்றாம் இடத்தையும் பெற்றுக் கொண்டனர்.

இந்நிகழ்வில் பாடசாலையின் பிரதி அதிபர், உப அதிபர் உட்பட கனமூலை பெரிய பள்ளியின் தலைவர் அஷ்ஷெய்க் எச்.எச்.எம். நஜீம் (ஷர்கி), பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள், பழைய மாணவர்சங்கஉறுப்பினர்கள், கலந்துகொண்டு இந்நிகழ்வு சிறப்பாக இடம்பெறுவதற்கு பங்களிப்பு செய்தமை குறிப்பிடத்தக்கது.

# மாணவர்களுக்கு வலுவூட்டும் பசுமை அறிவொளி நிகழ்ச்சி

## நல்லூரில் நடைபெற்றது



தமிழ்த் தேசியப் பசுமை இயக்கம் மாணவர்களுக்குச் சூழல் அறிவைப் புகட்டிச் சூழல் விழிப்புணர்வை ஏற்படுத்துவதன் மூலம் சூழல் பாதுகாப்பில் அவர்களைப் பங்குபற்றுநர்களாக்கும் நோக்குடனும், அவர்களின் பன்முக ஆளுமையை விருத்தி செய்யும் நோக்குடனும் பசுமை அறிவொளி என்னும் நிகழ்ச்சித் திட்டத்தை முன்னெடுத்து வருகின்றது.

மாணவர்களை வலுவூட்டுகின்ற இப்பசுமை அறிவொளி நிகழ்ச்சி ஞாயிற்றுக்கிழமை நல்லூர் திவ்ய ஜீவன சங்க மண்டபத்தில் நடைபெற்றது.

பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன் தலைமையில்ரூபவ் 'மாணவர்களுக்குச் சமூக விழுமியங்களைப் போதிப்பதில் பெற்றோரின் பங்கு' என்ற கருப்பொருளில் இந்நிகழ்ச்சி இடம்பெற்றது. இதில் ஆசிரியப்பார்வையில் வடக்குமாகாண ஓய்வுநிலை உதவிக் கல்விப் பணிப்பாளர் கௌரி முகுந்தனும், உளவளப் பார்வையில் உளவளத்துணையாளர் ஜீவசர்மிலா வேந்தகுமாரும் வளவாளர்களாகக் கலந்துகொண்டு சிறப்புரைகளை ஆற்றியிருந்தார்கள்.

இந்நிகழ்ச்சியில் நூற்றுக்கும் அதிகமான மாணவர்கள் அவர்களின் பெற்றோர்களுடன் கலந்துகொண்டிருந்தார்கள். நிகழ்ச்சியின் இறுதியில் மாணவர்கள் அனைவருக்கும் சூழல் விழிப்புணர்வு நோக்கில் பிரத்தியேகமாகத் தயாரிக்கப்பட்டிருந்த அப்பியாசக் கொப்பிகள் வழங்கப்பட்டன.

இதற்கான நிதி அனுசரணையை இலங்கையில் பல்வேறு சமூகப் பணிகளை முன்னெடுத்து வருகின்ற கனடாவைத் தளமாகக் கொண்ட ரொறன்ரோவின் மனிதநேயக்குரல் அமைப்பு வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.



# மெல்ல கற்கும் மாணவர்களுக்கான கற்பிட்டியில் செயல் முறை பயிற்சி

(சியாஜ்)

மெல்ல கற்கும் மாணவர்களின் ஆற்றல் ஆளுமைகளை வெளிக்கொண்டு வருவதற்கான செயல் முறைப் பயிற்சி கற்பிட்டி செடோ நெனசல காரியாலயத்தில் ஞாயிற்றுக்கிழமை செடோ நெனசல பணிப்பாளர் ஏ.ஆர் முனாஸ் தலைமையில் இடம்பெற்றது.

இச் செயல் முறை பயிற்சியினை கற்பிட்டி செடோ நெனசல முகாமையாளர் மற்றும் பயிற்றுவிப்பாளர் ஆகியோரின் மேற்பார்வையில் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.



# கிளிநொச்சி மத்திய கல்லூரியில் பிரதான நுழைவு வளைவு திறப்பு



நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரனின் பண்முகப்படுத்தப்பட்ட நான்கு மில்லியன் ரூபா செலவில் கிளிநொச்சி மத்திய கல்லூரியில் நுழை வளைவு நிர்மாணிக்கப்பட்டது .

மேற்படி நுழைவு வளைவு திறந்து வைக்கும் நிகழ்வு நேற்று (திங்கட்கிழமை) கல்லூரியின் முதல்வர் சவரி பூலோகராஜா தலைமையில் நடைபெற்றது.

நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் குறித்த நுழைவாயிலினை திறந்து வைத்தார்.

இந்த நிகழ்வில் பாடசாலை ஆசிரியர்கள்,ஓய்வு நிலை அதிபர்கள், பாடசாலை அபிவிருத்திசங்கத்தினர்,பழைய மாணவர்கள், மாணவர்கள் என பலர் கலந்து கொண்டனர்.

தொடர்ந்துஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த அவர் -

விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரனின் மகன் பாலச்சந்திரன் கொலை செய்யப்பட்டமை தொடர்பாக மஹிந்தராஜபக்ஷ வருந்துவதாக செய்திகள் வெளிவந்திருக்கின்றமையை உன்னிப்பாக அவதானிக்கப்படவேண்டியது அவசியம்.

அப்பாவி மாணவன் குழந்தையாக இருக்கின்ற போது பிஸ்கட் கொடுத்து அவரை மிக அருகில் வைத்து சுட்டுக்கொன்றார்களே, அதனை சிந்திக்காத மஹிந்தவின் குடும்பம் இப்பொழுதாவது மஹிந்தராஜபக்சவின் வாயால் அதனை ஒரு கனதியான வேதனையாக வெளிப்படுத்தியிருப்பதை மிக அவதானத்துடன் பார்க்கிறோம்.

இந்தமண்ணில்மிகப்பெரிய மனிதப்பேரவலங்களை நடத்துவதற்கு காரணமாக இருந்த மஹிந்த ராஜபக்ச கோட்டாபயராஜபக்சமற்றும் அவரின் குடும்பம் சார்ந்தவர்கள் இன்றாவது ஈழத்தமிழர்களுக்கு நடந்த அநீதி தொடர்பாகமெல்லவாய்திறக்கநினைப்பது காலமும் கர்மாவும் அவர்களுக்கு கொடுத்த தண்டனையாகவே கருதுகிறேன்.

ஜனாதிபதியாக அவர் இருந்த காலகட்டத்தில் யுத்தம் முடிந்த போது இந்த நாட்டில்தமிழ்மக்களின்தேசிய பிரச்சினையை தீர்க்கக்கூடிய மிகப்பெரிய தலைவராக அவர் இருந்தார்.

அவருக்கு சிங்கள மக்களின் அதிகமான ஆதரவு அவருக்கு இருந்தது இனப்பிரச்சினையை தீர்த்திருக்கமுடியும்வரலாற்றை பிழைவிட்ட தலைவராக வாழ்கின்றார்.அவர் இப்பொழுதாவது உணர தலைப்பட்டிருப்பது. வரலாற்றில் ஒரு திருப்பு முனையாக

# கடெற் மாணவர்களுக்கு சான்றிதழ்கள்

(அஷ்ரப்கான்)

ஒலுவில் அக்ஃஅல்-ஹம்றா மகாவித்தியாலயத்தில் நேற்று (திங்கட்கிழமை) நடைபெற்ற பொது காலைக்கூட்டத்தில் ‘17 ஆவது படைப்பிரிவின் பெட்டாலியன் செலக்ஸன் கேம்ப்’ இல் பங்குபற்றிய கடேட் மாணவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கி வைக்கப்பட்டன.

பிளட்டூன் கொமாண்டர் லெப்டினன்ட் ஏ.எம்.எம்.கியாஸின் வழிநடத்தலில் அதிபர் யு.கே.அப்துர் ரஹீம் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்விற்கு விஷேட அதிதியாக கல்முனை உதவிப்பொலிஸ் அத்தியட்சகர் எம்.கே.இப்னு அஸார் வருகை தந்து மாணவர்களுக்கு சான்றிதழ்களை வழங்கி கௌரவித்தார்.

நிகழ்வில் உதவிப்பொலிஸ் அத்தியட்சகர் எம்.கே.இப்னு அஸார் அவர்களை அதிபர் யு.கே.அப்துர் ரஹீம் பொன்னாடை போர்த்திக் கௌரவித்தார்.





இங்கு மாணவர்களுக்கு பயிற்சிகளை வழங்கும் பொலிஸ் (இன்ஸ்டக்டர்) எம்.சுதர்சன், பிரதி, உதவி அதிபர்கள், ஆசிரியர்கள் மாணவர்கள் எனப்பலரும் கலந்துகொண்டனர்.

# காத்தான்குடி பிரதேச செயலக அபிவிருத்திக்குழுக் கூட்டம்

(சினீஸ் கான்)

காத்தான்குடி பிரதேச செயலக அபிவிருத்திக்குழுக் கூட்டம் நேற்று (திங்கட்கிழமை) பிரதேச செயலாளர் நிஹாரா மொஜுத் வழிநடத்தலில் அபிவிருத்திக் குழுத் தலைவர் கந்தசாமி பிரபு தலைமையில்






நடைபெற்றது.

இந்நிகழ்வில், நாடாளுமன்ற உறுப்பினரும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பிரதித் தலைவருமான கலாநிதி எம்.எல்.ஏ.எம் ஹிஸ்புல்லாஹ் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எஸ் நழீம் மற்றும் உயர் அதிகாரிகள் பலர் கலந்துகொண்டனர்.



# பாரதி அண்ணாவின்

## இறுதிக்கிரியை அறிவித்தல்..



| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 1962 | 2025 |
| 09 | 02 |
| 06 | 09 |

# அமரர். இராஜநாயகம் பாரதி

(மூத்த ஊடகவியலாளர் )

திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும் கொழும்பையும் திருநெல்வேலியையும் வசிப்பிடமாகவும் கொண்ட சிரேஷ்ட ஊடகவியலாளர் திரு இராஜநாயகம் பாரதி 09/02/2025 அன்று திருநெல்வேலியில் அவர் வாழ்ந்த இல்லத்தில் காலமானார் . அன்னார் காலஞ்சென்றவர்களான பிரபல கணித ஆசிரியர் திரு சு .இராஜநாயகம் - சிவயோகம் தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான வடமராட்சி விவாகப் பதிவாளர் திரு சி .தாமோதரம்பிள்ளை - தனலக்ஷ்மி தம்பதிகளின் அன்பு மருமகனும் தேவகியின் அன்புக்கணவரும் - பார்த்தீபனின் பாசமிகு தந்தையும் அமரர் பரதன் மற்றும் சுரபி ஆகியோரின் அன்பு சகோதரனும் ப.விநோதினி, க.சிவராசா, சுகந்தி, கௌரி, காலஞ்சென்ற நளினி மற்றும் பரன், பாமதி, சபேசன், பத்மநிதி, சுபேந்திரன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார் .

**அன்னாரின் புகழுடல் மக்கள் அஞ்சலிக்காக 105/1 பலாலி வீதியில் உள்ள அவரது இல்லத்தில் எதிர்வரும் வியாழக்கிழமை 13. 02. 2025 வரை வைக்கப்படும். வியாழன் அன்று காலை 9:00 மணியளவில் அஞ்சலி உரைகள் நிகழ்த்தப்பட்டு 11:00 மணியளவில் ஈமக் கிரிகைகளைத் தொடர்ந்து 1:30 மணியளவில் கொக்குவில் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும் .**

**இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக் கொள்கின்றோம்.**

தகவல்: நண்பர்கள்

காலைக்கதிர் Kalaikkathir

# யாழில் போதை மாத்திரைகளுடன் சந்தேகநபர் ஒருவர் கைதாகினார்

யாழ்ப்பாணம் - கொழும்புத்துறை, வளம்புறத்தில் நீண்ட காலமாக போதை மாதித்திரைகள் விற்பனையில் ஈடுபட்டுவந்த சந்தேகநபர் ஒருவர் 20 போதை மாத்திரைகளுடன் ஞாயிற்றுக்கிழமை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணம் மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகருக்கு கீழ் இயங்கும் பொலிஸ் புலனாய்வு பிரிவினருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் இந்த கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

மேலதிக விசாரணைகளின் பின்னர் அவரை நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# யாழ் பல்கலை கிளிநொச்சி வளாகத்தில் அமைக்கப்பட்ட புதிய தேவாலயம் திறப்பு



யாழ். பல்கலைக்கழக கிளிநொச்சி வளாக கிறிஸ்தவ மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் கிறிஸ்தவ மாணவர்களின் வழிபாட்டுக்காக நிர்மாணிக்கப்பட்ட தேவாலயம் யாழ் மறைமாவட்ட ஆயர் ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகையால் திறந்து வைக்கப்பட்டது.

இந்தநிகழ்வில்யாழ்பல்கலைக்கழகதுணைவேந்தவர் பேராசிரியர் சிறீ சற்குணராஜா, பீடங்களின் பீடாதிபதிகள், விரிவுரையாளர்கள், பங்குத்தந்தையர்கள், பங்குகளின் மக்கள், பல்கலைக்கழக மாணவர்கள் என பலர் கலந்து கொண்டனர். (-316)





# 'கிளின் ஸ்ரீ லங்கா' வேலைத்திட்டம் சத்தியப்பிரமாணத்துடன் ஆரம்பம்

கிளின் சிறிலங்கா வேலைத்திட்டம் கிண்ணியா அல்- மினா மகா வித்தியாலத்தில் நேற்று அதிபர் எம். வை. ஹதியத்துள்ளாஹ் தலைமையில் ஆரம்பிக்கப்பட்டது.

அரச சுற்றறிக்கைக்கு அமைவாக நான்கு வாரத்திற்கு இச்செயற்றிட்டத்தை நடைமுறைப்படுத்தும் இந்நிகழ்வு ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

மாணவர்கள் அனைவரும் பாடசாலை அதிபர் முன்னிலையில் சத்தியப் பிரமாணம் செய்து இவ்வேலைத்திட்டம் ' நேயமான பாடசாலையினூடாக பசுமையான வகுப்பறையினை உருவாக்கல்'எனும் தொனிப் பொருளுடன் நடைமுறைப்படுத்தப்பட்டது.





# கோணாவத்தை வீதி சிதைவு அதிகாரிகளோ பாராமுகம்

## பொதுமக்கள் குற்றச்சாட்டு

(றமீஸ்)

அட்டாளைச்சேனை அக்கரைப்பற்று பிரதேசங்களை இணைக்கும் கோணாவத்தை ஆற்றங்கரை பிரதான காபட் வீதி கடந்த மூன்று மாத காலமாக சிதைவடைந்து காணப்படுவதாகவும் தற்போது இவ்வீதி மூலமான போக்குவரத்து முற்றாக தடைப்பட்டுள்ளதாகவும் பிரதேச மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

அக்கரைப்பற்று, அட்டாளைச்சேனை, பாலமுனை மற்றும் ஒலுவில் ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த பல நூற்றுக்கணக்கான பொதுமக்கள் தினமும் பயன்படுத்தும் பாதையாகவும் இவ்வீதி அமைகின்றது. இவ்வீதியினை புனரமைத்து தருமாறு பல தடவைகள் கோரிக்கை விடுத்தும் அதிகாரிகள் அசமந்தப் போக்கில் உள்ளனர் என பொதுமக்கள் குற்றம் சாட்டுகின்றனர். கோணாவத்தை ஆறு மற்றும் கடற்கரையினை அண்டிய பகுதியில் இவ்வீதி அமையப் பெற்றுள்ளதால் மீன்பிடித் தொழிலாளர்கள் இப்பாதையை வெகுவாக பயன்படுத்தியும் வந்துள்ளனர்.

கடந்த மூன்று மாதங்களுக்கு முன்னர் இப்பிரதேசத்தில் ஏற்பட்ட வெள்ள நிலைமை காரணமாக இவ்வீதி உடைப்பெடுத்தமையால் சிறியளவில் சிதைவடைந்து காணப்பட்டது. சிதைவடைந்த இவ்வீதியினை மக்கள் சிரமத்துடன் போக்குவரத்திற்காக பயன்படுத்தி வந்த நிலையில், கடந்த ஒரு மாதத்திற்கு முன்னர் பெய்த அடைமழை காரணமாக மக்கள் குடியிருப்புகளுக்குள் வெள்ள நீர் நிறைந்திருந்து காணப்பட்டது.

வெள்ள நீரை அப்புறப் படுத்தும் வகையில் குறித்த இவ்வீதி அட்டாளைச்சேனை பிரதேச சபை மூலம் கனரக வாகனத்தின் உதவியுடன் உடைக்கப்பட்டு ஆற்றுப் பகுதிக்குள் வெள்ள நீர் வெளியேற்றப்பட்டது. இவ்வாறு உடைக்கப்பட்ட இவ்வீதி ஒரு மாத காலத்திற்கும் மேலாக சீர் செய்யப்படாமல் கைவிடப்பட்ட நிலையில் காணப்படுகின்றது.

மழை காலங்களில் நிரம்பும் வெள்ள நீரினை அப்புறப்படுத்தும் வகையில் முறையான திட்டமிடலின்றியும், போதியவிலான வடிகான்கள் இன்றியும் இவ்வீதி காபட் வீதியாக நிர்மாணிக்கப்பட்டதாகவும், மழை காலங்களில் தொடர்ச்சியாக இவ்வீதி உடைப்பெடுப்பதாகவும் பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர்.

சிதைவடைந்து காணப்படும் இவ்வீதி இரவு வேளைகளில் இருள் சூழ்ந்து காணப்படுவதால் பல்வேறு விபத்துச் சம்பவங்களும் இடம்பெறுவதோடு, பொதுமக்கள், மாணவர்கள், வயோதிபர்கள், பெண்கள் போன்றோர் இப்பாதையினை பயன்படுத்துவதில் பல்வேறான சிரமங்களையும் எதிர்நோக்கி வருகின்றனர்.

துறைசார் அதிகாரிகள் விரைந்து செயற்பட்டு குறித்த இவ்வீதியை மக்கள் போக்குவரத்திற்காக தயார் செய்து தருமாறு பொதுமக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.



## சேர்ந்து....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எதிர்வரும்உள்ளூராட்சிமன்றத்தேர்தலில் பொதுமக்களின் ஆலோசனைகளையும் அபிப்பிராயங்களையும் கேட்டறிந்து மக்கள் மத்தியில்நன்மதிப்பைபெற்றவேட்பாளர்களை இனம்கண்டு களம் இறக்குவது தொடர்பாகக் கலந்துரையாடியுள்ளோம்.

அந்த வகையில் வவுனியா வடக்கு பிரதேச சபைக்காக ஏனைய தமிழ்க் கட்சிகளோடு இணைந்து போட்டியிடுவதாகத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. அந்தப் பகுதியானது நீண்ட காலமாக சிங்களக் குடியேற்றம், பௌத்த மயமாக்கல் செயற்பாடுகளால் பாதிக்கப்பட்டுள்ளது. அதன் இனவிகிதாசாரத்தில் பெரும்மாற்றங்களும்ஏற்பட்டுள்ளன. எனவே தமிழ் அரசுக் கட்சி மற்றும் தமிழ் தேசிய மக்கள் முன்னணியோடும் பேசி அங்கு இணைந்து போட்டியிட முடியுமா என்பது தொடர்பாகக் கலந்துரையாடவுள்ளோம்.

கடந்த ஜனாதிபதி மற்றும் நாடாளுமன்றத் தேர்தல்கள் போல இந்த தேர்தல் அமையாது. ஏனெனில் தேசியமக்கள் சக்தி மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றமுடியாமல் திணறுகின்ற நிலைமையை அவதானிக்கிறோம். தேசிய மக்கள் சக்திக்கு வாக்களித்த பெரும்பாலான தமிழ் மக்கள் இன்று வருத்தப்படுகின்ற நிலையைக் காண்கின்றோம். எனவே உள்ளூராட்சி மற்றும் மாகாணசபை தேர்தல்களில் தமிழ் மக்கள் சரியான முடிவை எடுப்பார்கள் என்று நம்புகின்றோம். எமது பிரதேசத்தில் நாங்களே ஆளுமை செய்யவேண்டிய நிலமையை உருவாக்கவேண்டும்.

அந்த வகையில் பலமான கூட்டணியான ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியின் கரங்களைப் பலப்படுத்தவேண்டியது வடக்கு கிழக்கு தமிழ் மக்களின் கடமையாக இருக்கிறது என்றார்.

## 7 சந்தேகநபர்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வருகை தரவிருந்த சாடசிகள் இருவரும் நீதிமன்றிற்குவந்திருக்கவில்லை. இதையடுத்து சந்தேகநபர்கள் 7 பேரையும் பெப்ரவரி 24 வரை விளக்கமறியலில் வைக்க நீதிவான் உத்தரவிட்டார்.

இக்கொலை தொடர்பான மேலதிக விசாரணைகளில் குற்றத்தடுப்பு பிரிவினர் மற்றும் பொலிஸ் புலனாய்வுத் துறையினர் ஈடுபட்டு வருவதாக நீதிமன்றில் தெரிவிக்கப்பட்டது.

மன்னார் நீதிமன்றத்தில் பெப்ரவரி 16 வழக்கு விசாரணை ஒன்றுக்காக நீதிமன்றத்துக்கு வருகை தந்தவர்களை இலக்குவைத்து மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச் சூட்டு சம்பவத்தில் இருவர் உயிரிழந்தனர். பெண் ஒருவர் உள்ளடங்கலாக இருவர் படுகாயமடைந்தனர்.

இந்நிலையில், மன்னார் மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரின் பணிப்புரைக்கு அமைவாக விசேட பொலிஸ் குழுக்கள் நியமிக்கப்பட்டு முன்னெடுக்கப்பட்டு வந்த விசாரணைகளின்போது பிரதான சந்தேகநபர்கள் உள்ளடங்கலாக 7 பேரை மன்னார் பொலிஸார் கைது செய்தனர். அவர்களில் இராணுவத்துடன் தொடர்புடைய மூன்று பேர் அடங்குகின்றனர்.

## நீதிமன்றத்தின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாடாளுமன்ற அலுவல்கள் பற்றிய குழு நேற்றுக்கூடியது. நாடாளுமன்றத்தின் நிலையியற்கட்டளைக்குஅமையபிரதமரினால் சபாநாயகரிடம் விடுக்கப்படும் கோரிக்கைக்கு அமையநாடாளுமன்றத்தைக்கூட்டுவதற்கான அழைப்பு விடுக்கப்படுகின்றது. அத்துடன், பெப்ரவரி 14 இந்தச் சட்டமூலத்தை ஆராய்வதற்காகசம்பந்தப்பட்ட அமைச்சுசார் ஆலோசனைக் குழுவைக் கூட்டுவதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

உள்ளூர் அதிகாரசபைகளுக்கான தேர்தல்களை விரைவில் நடத்துமாறு உயர்நீதிமன்றத்தினால் தீர்ப்பு வழங்கப்பட்டிருக்கும் பின்னணியில், இதற்கு மதிப்பளிக்கும் வகையில் தேர்தலை மேலும் காலதாமதப்படுத்தாது நடத்துவதன் அவசியத்தை சபை முதல்வரும் அமைச்சருமான பிமல் ரத்னாயக்க இங்கு சுட்டிக்காட்டினார்.

இதன்படி, உள்ளூர் அதிகார சபைகளுக்கான தேர்தல்கள் (விசேட ஏற்பாடுகள்) சட்டமூலம் தொடர்பான இரண்டாவது மதிப்பீட்டு விவாதத்தை பெப்ரவரி 17 திங்கட்கிழமை பி.ப 2.00 மணி முதல் பி.ப 7.00 மணிவரை நடத்துவதற்கும் இங்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

சட்டமூலம் தொடர்பில் எதிர்க்கட்சிகள் திருத்தங்களைமுன்வைப்பதாயின்அவற்றை பெப்ரவரி 17 மு.ப 10.00 மணிக்கு முன்னர் வழங்குவதற்கும் இணங்கப்பட்டுள்ளது.

நிதி அமைச்சர் என்ற ரீதியில் ஜனாதிபதி அவர்களினால் 2025ஆம் ஆண்டுக்கான நிதி ஒதுக்கீட்டுச் சட்டமூலத்தின் இரண்டாவது மதிப்பீடு (வரவுசெலவுத்திட்ட உரை) முன்னர் தீர்மானிக்கப்பட்டதற்கு அமைய பெப்ரவரி 17ஆம் திகதி திங்கட்கிழமை மு.ப 10.30 மணிக்கு முன்வைக்கப்படும்.

## மாவையின்....

(இரண்டாம் பக்கத் தொடர்ச்சி)

அப்போது அவருடைய உடல்நலன்கள் குறித்தே கலந்துரையாடினோம். எந்தவொரு சந்தர்ப்பத்திலும் நாம் அவருடன் கட்சி சார்ந்த விடயங்களையோ அரசியல் சார்ந்த விடயங்களையோ பேசியிருக்கவில்லை.

மேலும், அவர் எம்முடன் அன்னியோன்யமாகவே உரையாடினார். நாம் விடைபெற்றபோது தனது உடல் நலக்குறைவைக்கூடப் பொருட்படுத்தாது எம்மை வழியனுப்பிவைப்பதற்காகவரமுயன்றிருந்தார். உண்மை அப்படி இருக்கின்றபோது எமக்கு எதிராக விசமத்தனமான பரப்புரைகள் செய்யப்படுகின்றன. குறிப்பாக, சசிகலாரவிராஜ் உள்ளிட்டவர்கள்கூட நாம், சேனாதிராசாவுக்கு அழுத்தங்களை பிரயோகித்தோம் என்ற தொனிப்பட கருத்துக்களை தெரிவித்தமை வருத்தமளிப்பதாக உள்ளது.

இதனையடுத்தே, எமது கட்சியின் மத்தியகுழுவின் அங்கத்தவர்களான 18 பேரின் புகைப்படங்களுடன் கூடி பதாகையொன்று சேனாதிராசாவின் இறுதிச்சடங்கு நடைபெற்ற மயானத்தில் காட்சிப்படுத்தப்பட்டிருந்தது. அதில் நாம் தான் சேனாதிராசாவின் இறப்புக்குக் காரணமானவர்கள் என்ற அடிப்படையில் வசனங்களும் எழுதப்பட்டிருந்தன.

அந்தப் பாதாகை சம்பந்தமாக விசாரணைகளை மேற்கொள்ளுமாறு பொலிஸாரிடத்தில்முறைப்பாடுசெய்துள்ளேன். அதுமட்டுமன்றி, இந்த விடயங்களுக்குப் பின்னால் கட்சியில் உள்ளவர்கள் மட்டுமல்ல, எமக்கு எதிரான கட்சிகளில் உள்ளவர்கள், புலம்பெயர்ந்த நாடுகளில் உள்ளவர்கள் உள்ளிட்ட பல சக்திகள் உள்ளன.

இந்தச் சக்திகள் தமிழ் அரசுக் கட்சியைப் பிளவடையச் செய்யவேண்டும் அல்லது அரசியல் அரங்கிலிருந்து ஒதுக்கவேண்டும் என்று செயற்படுகின்ற தரப்புக்களாகும். ஆகவே இந்த விடயங்கள் சம்பந்தமாக உண்மைகள் கண்டறியப்பட்டு வெளிப்படுத்தப்படுகின்றபோது பின்னணியில் உள்ளவர்கள் அடையாளப்படுத்தப்படுவார்கள்.

சேனாதிராசாவுக்கும், எனக்கும் இடையில் எவ்விதமான தனிப்பட்ட முரண்பாடுகளும் கிடையாது. ஆகவே அவருடைய இறப்புக்கு நான் ஒருபோதும் காரணமானவன் அல்லன் என்றார்.



காலைக்கதிர் Kalaikkathir

# வெள்ளத்தால் பாதிப்படைந்த 350 குடும்பங்களுக்கு சீன தூதரகத்தால் உலருணவு பொருள்கள் வழங்கல்



வவுனியா மாவட்டத்தில் கடந்த காலத்தில் வெள்ள அனர்த்தம் காரணமாக பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு சீன தூதரகத்தால் உலருணவுப்பொதிகள் வழங்கும் நிகழ்வு வவுனியா மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது.

சீனத்தூரகத்தின் பிரதிப்பிரதானி சூ.யன்வெய் அவர்களின் தலைமையில் இடம்பெற்ற இந் நிகழ்வில் 350 குடும்பங்களுக்கான உலர் உணவுப்பொதிகள் வழங்கப்பட்டன.

வடமாகாணத்தில் 2470 குடும்பங்களுக்கு 6490ரூபா பெறுமதியான உலருணவுப்பொதிகள் வழங்கப்படவுள்ளதுடன் அந்த வகையில் வவுனியா மாவட்டத்தில் 350 குடும்பங்களுக்கு இவை வழங்கப்பட்டன.

இந் நிகழ்வில் மாவட்ட அரசாங்க அதிபர் பீ.ஏ.சரத்சந்திர, மேலதிக அரசாங்க அதிபர் தி.திரேஸ்குமார், மேலதிக அரசாங்க அதிபர் (காணி) ந.கமலதாசன் மற்றும் சீன துதுரக இடைக்கால பொறுப்பாளர் ஜுயானுவேல், சீனதுதுரக அரசியல் பிரிவுத் தலைவர் குயின் லிகோங் மற்றும் சீன தூதரக அதிகாரிகள், மாவட்ட செயலக அதிகாரிகள், கிராம சேவையாளர்கள், பயனாளிகள் என பலரும் கலந்து கொண்டனர். 100







# அவயவங்களை இழந்துள்ள வன்னி மக்களுக்கு மறுவாழ்வு

யாழ். பல்கலைக்கழக பொறியியல் பீடத்தின் கீழ் முப்பரிமாண தொழில் நுட்பத்தினூடாக வடக்கு கிழக்கில் உள்ள அவயவங்களை இழந்த மக்களின் மறுவாழ்வை முன்னிறுத்தி விசேட திட்டமொன்று முன்னெடுக்கப்படவுள்ளதாக திட்ட ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.

கலிபோர்னியாபல்கலையின் ஓய்வு நிலை பேராசிரியர் காசி விஸ்வனாதன் செல்வகுமார் மற்றும் கனடா - இலங்கைக்கான வர்த்தக சபையின் இணைப்பாளர் குலா செல்லத்துரை ஆகியோர் இதை தெரிவித்துள்ளனர்.

யாழ். ஊடக அமையத்தில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற ஊடக சந்திப்பில் இவ்வாறு தெரிவித்த அவர்கள் மேலும் கூறுகையில் -

யாழ். பல்கலைக்கழக பொறியியல்பீடத்தின்செயற்கை உறுப்புகளுக்கான மையம் மற்றும் இந்தியாவின்தீப்பொறி ஊடகம் இணைந்து மாற்றுத் திறனாளிகளின் வாழ்வை வலுப்படுத்தும்இந்ததிட்டமாக இது முன்னெடுக்கப்படுகின்றது.

யாழ் பல்கலை பொறியியல் பீடத்தின் தொழில் நுட்ப அனுசரணையூடாக கனேடிய அரசு மற்றும் கனேடிய வர்த்தக சம்மேளனம் ஆகியவற்றின் நிதிப் பங்களிப்பில் இந்த மறுவாழ்வு வழங்கும் திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

மேலும் இந்த திட்டம் கடந்த 7 வருடங்களுக்கு முன்னர் மலேசிய நிறுவனம் ஒன்றால் முன்னெடுக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில் குறித்த வரப்பிரசாதத்தை வன்னியில் உள்ள அவயவங்களை இழந்து நாளாந்தம் பல்வேறு அவமானங்களையும் அசௌகரியங்களையும் கண்டுவருவோர் பெற்றுக் கொள்ளும் வகையில் முதற்கட்டமாக முன்னெடுக்கப்படுகின்றது.

இந்த முப்பரிமாண பொறிமுறையூடான அவயவங்களை பெற்றுக் கொள்ளும் பயனாளிகள் அதை எவ்வாறு பயன்படுத்திக் கொள்வது என்பது தொடர்பாக பயிற்சிப் பட்டறை ஒன்று இந்தியாவின் குஜராத் மாநிலத்தில் எதிர்வரும் மார்ச் மாதம் 5 ஆம் திகதிமுதல் 9 ஆம் திகதிவரை நடத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிள்ளது.




இதில் பங்கேற்க இலங்கையில் இருந்து 50 பேரை அழைத்துச் செல்ல நடவடிக்கை எடுத்துள்ளோம். இதேநேரம் இந்த அவயவங்கள்முப்பரிமாணபொறிமுறையூடாக தயாரிக்கப்படுகின்றது.

ஆனாலும் இந்த தொழில் நுட்பம் இலங்கையில்இன்மையால்அதைஇந்தியாவில் இருந்து முதற் கட்டமாக பெற்றுக்கொள்ள ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

அதன் பின்னர் இதை யாழ்.பல்கலை பொறியியல் பீடம் முழுமையாக மேற்கொள்ளும்,இதேநேரம்இந்ததிட்டமானது யுத்தத்தில் பாதிக்கப்படு அவயவங்களை இழந்தவர்களுக்கு மட்டுமல்லாது ஏனைய விபத்து மற்றும் நோய்களால் அவயவங்களை இழந்தவர்களுக்கும் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அந்தவகையில் அவயவங்களை இழந்தவர்களுக்கு அவர்களது சுய மரியாதையை மீண்டும் உருவாக்கல் மற்றும் அவர்களின் பொருளாதார ஈட்டலுக்கான வழியை உருவாக்கல் ஆகியவற்றை மையமாக கொண்டு முன்னெடுக்கப்படும் இந்த திட்டத்தில் பாதிக்கப்பட்டவர்கள் தமக்கான அவயவங்களை பெற்றுக்கொள்ள முடியும் என்பதுடன் 0742287850 என்னும் இலக்கத்துடன் தொடர்புகளை ஏற்படுத்தி பயன் பெற்றுக்கொள்ளுமாறும் முடியும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

வயலும் வயல்சார்ந்த இடமுமான 'மருதம்' நிலத்தில் பண்ணை வீட்டுடன் கூடிய செயற்திட்டம்



காலைக்கதிர் Kalaikkathir

# இ.போ.சபை வவுனியா சாலையின் புறக்கணிப்பு போராட்டம் நிறுத்தம்

இலங்கை போக்குவரத்து சபையின் வவுனியாசாலையின் பொறியியல் பகுதியினரால் முன்னெடுக்கப்பட்ட பணிப்பகிஸ்கரிப்புபோராட்டம் பேச்சுகளை அடுத்து கைவிடப்பட்டது.

குறித்த சாலையின் பொறியியல் பிரிவில் பணிபுரியும் ஊழியர்களுக்கு இரண்டு மாதங்களாக மேலதிக நேரக்கொடுப்பனவுகள் வழங்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இதனை அடுத்து ஞாயிற்றுக்கிழமை காலை முதல் அவர்களால் பணிப்புறக்கணிப்பு போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. இதனால் வவுனியா சாலையின் பஸ்கள் காலை முதல் சேவைகளை முன்னெடுக்கவில்லை.

இந்நிலையில் சாலைக்கு சென்ற தேசிய மக்கள் சக்தியின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ம.ஜெகதீஸ்வரன் பணிபகிஸ்கரிப்பில் ஈடுபட்ட ஊழியர்கள் மற்றும் அதிகாரிகளுடன் பேச்சில் ஈடுபட்டிருந்தார்.

இதன்போது அவர்களுக்கான மேலதிக நேரக்கொடுப்பனவை விரைவாக வழங்குவதாக உறுதியளிக்கப்பட்டது. இதனையடுத்து குறித்த போராட்டம் தற்காலிகமாகக் கைவிடப்பட்டது.

இதேவேளை குறித்த விடயம் தொடர்பாக எதிர்வரும் வாரம் போக்குவரத்துசபையின் உயர் அதிகாரிகளுடனும் பேச்சு ஒன்று முன்னெடுக்கபட உள்ளதாகதீர்மானிக்கப்பட்டுள்ளது.



100

# தென்மராட்சி எழுதுமட்டுவாள் பகுதியில் ஆட்டுக்குட்டிக்கு பால் கொடுக்கும் நாய்

(சுபேசன்)

தென்மராட்சி எழுதுமட்டுவாள் கிராமத்தில் தாயை இழந்த ஆட்டுக்குட்டிக்கு நாய் ஒன்று பால் கொடுக்கும் நெகிழ்ச்சியானசம்பவம் ஒன்று இடம்பெற்று வருகின்றது.

தாய் ஆடானது குட்டி ஈன்ற பின்னர் உயிரிழந்த நிலையில் அண்மையில் குட்டி ஈன்ற நாய் தாயை இழந்த ஆட்டுக்குட்டியின் பசியைப் பாலூட்டி போக்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.



# 150 குடும்பங்களுக்கு சீன அரசால் உதவி

வெள்ள அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட 150 பேருக்கான நிவாரணப்பொருள்களை இலங்கைக்கான சீனத் தூதரகத்தின் பிரதிப் பிரதானி சூ யன்வெய் வழங்கி வைத்தார்.

கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற நிகழ்வில் மாவட்ட செயலாளர் எஸ்.முரளிதரன் உள்ளிட்ட சீன தூதரகத்தின் உயரதிகாரிகள் கலந்துகொண்டனர். 316






இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 11.02.2025இல் வெளியிடப்பெற்றது